


குமுதத்தில் நடந்து வரும் தமிழ் நாடக சர்ச்சையில் சுஜாதாவும் உண்மைக் காரணத்தை ஆராயவில்லை.

கன்னட நாடகங்களைக் கண்டதால் நல்ல நாடகம் பற்றி அறிய வாய்ப்பிருக்கிற சுஜாதா எழுதிய தமிழ் நாடகங்களின் லட்சணம் என்ன? பூர்ணம் ஃபார்முலாவிலேயே இரண்டு கொழுக்கட்டை பிடித்ததுதான்.

சுஜாதாவின் '24 ரூபாய் தீவு' நாவலை நவீன நாடக உத்திகளைக் கொண்டு ஓர் உருப்படியான நாடகமாக்க எங்கள் 'பரீக்ஷா நாடகக் குழு முற்பட்டது. தேதி, இடம் எல்லாம் நிச்சயித்துவிட்ட நிலையில், அந்தக் கதையை சினிமாவுக்கு வாங்கியிருந்த, பாரதிராஜா பாராட்டிய, 'அவள் அப்படித்தான்' புகழ் ருத்ரய்யா, சுஜாதாவுக்கு ட்ரங்க்கால் செய்து எங்களை நாடகத்தை நடத்த விடாமல் தடுத்து விட்டார். அப்புறம் நவீன நாடகம் எப்படி வளரும்?

தமிழில் மொழி பெயர்ப்புக்கள் வரவில்லையா? க்ரியா வெளியீடான சுரேந்திரவர்மாவின் 'சூரியனின் கடைசி கிரணத்திலிருந்து முதல் கிரணம் வரை.' வாசகர் வட்டத்தின் மோகன் ராகேஷ் நாடகங்கள், அன்னம் வெளியீடான பாதல் சர்க்காரின் 'பிறகொரு இந்திரஜித்', நேஷனல் புக் ட்ரஸ்டின் கிரேக்க நாடகங்கள், தமிழ்ப்புத்தகாலய வெளியீடான ப்ரெஷ்டின், 'நல்லவர் ஒருவர்', எல்லாம் என்னவாம்?




பூர்ணம், விசு, மௌளி, சோ, சேஷாத்ரி, மேஜர் இத்யாதிகள் ஏதோ அற்புதமான நாடகங்கள் நடத்தியது போலவும் இப்போது எல்லாம் போய் விட்டதே என்று அங்கலாய்ப்பதிலும் அர்த்தமில்லை. எப்போதாவது ஒரு நல்ல நடிப்பைத் தந்ததைத் தவிர இந்தக் குழுக்கள் முழுமையான நல்ல நாடகங்களை எந்த நாளிலும் தந்ததே கிடையாது. தமிழில் நல்ல நாடகம் வளரவிடாமல் தடுத்தவர்களே நல்ல நாடகம் பற்றி அங்கலாய்க்கிறது நல்ல நடிப்புத்தான்!

ஆடியன்சுகளுடைய ரசனையை ஒரே ஃபார்முலாவில் அடக்கி மூளைச் சலவை செய்தன சபாக்கள். 'பரீக்ஷா அனுபவத்தையே பார்ப்போம். இந்திரா பார்த்தசாரதியின் 'போர்வை போர்த்திய உடல்கள்', நாடகத்தைப் படித்து விட்டு ஒரு பிரபல சபா எங்களுக்குச் சொன்னது: ''எங்களுடைய ஆடியன்சையும் ஆடிட்டோரியத்தையும் தருகிறோம். காசு தர முடியாது. தயாரிப்புச் செலவு உங்களுடையது". அதாவது பரீக்ஷா தயாரிப்பிற்காகச் செலவழிக்கும் ஐந்நூறு அறுநூறு ரூபாய்கள் திரும்பி வராது. ஆனால் சபாக்காரர் தன் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கிற ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒட்டு மொத்தமாகச் சுருட்டிக் கொள்வார். எப்படி?

இதை நிராகரித்துவிட்டு 'பரீக்ஷா தானே ஆடிட்டோரியம் செலவையும் மேற்கொண்டு மியூசியம் தியேட்டரில் நாடகத்தை நடத்தியது. ஒரு பைசா நஷ்டமில்லை. ஆடியன்ஸ் ரசிக்கமாட்டார்கள் என்பதும் பொய்யாயிற்று. கேட் கலெக்ஷன் மட்டுமே 276 ரூபாய். டிக்கெட் ரேட் ஒரே ரேட் தான் - 2 ரூபாய்.

நவம்பரில் துவங்கி எட்டே மாதங்களில் 'பரீக்ஷா ' சொந்தச் செலவில் இ. பா. வின் 'போர்வை போர்த்திய உடல்கள்', அம்பையின் 'பயங்கள்' ந. முத்துசாமியின் 'நாற்காலிகாரர்,' அறந்தை நாராயணனின் 'மூர்மார்க்கெட்', ஞாநியின் 'ஏன்' என்று ஐந்து பெரிய நாடகங்களையும் 'முட்கள்', ' ஸ்ரீமான் பொது ஜனம்,' கே. வி. ராம சாமியின் 'ஹிரண்யகசிபு' என்ற சிறு நாடகங்களையும் தயாரித்திருக்கிறது. ஒரு தம்படி நஷ்டமில்லை. சராசரி 400 பேர் பார்க்க வருகிறார்கள். ஒரு Theatre Workshopம் பரீக்ஷா நடத்தியிருக்கிறது.

எட்டு மாத காலப் போராட்டத்துக்குப் பிறகு இப்போது இரண்டு சபாக்கள் எங்கள் நாடகங்களைப் போட முன் வந்திருக்கிறார்கள்.

எங்கள் நாடகங்களின் தரம் நாங்கள் திட்டமிட்டபடி, விரும்பியபடி இன்னும் அமையவில்லை. ஆனால் எந்த சராசரி சபா நாடகத்தையும் விட இவை மேலானவைதான். எங்கள் குழுவில் போஸ்டர் ஒட்டுவது ஒப்பனை, செட் போடுவது எல்லாம் நாங்களே தான். காரணம் எங்களுக்கு இது ஓர் இயக்கம். வெறுமே காசு பண்ணுகிற விவகாரமில்லை.

பரீக்ஷா சென்னையில் மேடை நாடகங்கள் நடத்துகிறது. 'வீதி' என்கிற கலாச்சார இயக்கம் தெரு நாடகங்கள் நடத்திவருகிறது. நந்தனம் கலைக் கல்லூரி திறந்தவெளியில் ஒருமுறையும், பின்னர் பதினைந்து நாளுக்கொரு முறை ஞாயிற்றுக்கிழமை மாலைகளில் மெரீனா கடற்கரையில் நாடகங்கள் நடத்தி வருகிறது. இருநூறு பேருக்குக் குறையாமல் வட்டமாக நின்று அமைதியாகப் பத்து பேர் நடத்தும் நாடகங்களைப் பார்க்கிறார்கள். 'பரிவர்த்தனா' என்கிற இலக்கிய அமைப்பு தெரு நாடகம் பற்றி ஒரு முழு நாள் கருத்தரங்கமே நடத்திற்று. அதன் கடைசியில் மெரினாவில், பல்லாவரம் மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தினர் பாதல் சர்க்கார் பாணி யில் 'பெல்ச்சி' நாடகத்தை நடத்தினார்கள். சபா சமாதிகளில் தூங்குகிறவர்களுக்கு இதெல்லாம் எப்படி தெரியும்?

மதுரையில் நிஜநாடக இயக்கத்தினர் பூங்காக்களில் நாடகங்கள் நடத்துகிறார்கள். மதுரைக்கருகே காந்திகிராமத்தில் ராமானுஜம் என்றொருவர் இருந்தார். இப்போது கேரளாவுக்குப் போய்விட்டார். டெல்லி தேசிய நாடகப் பள்ளியில் பயின்று, நாடகத்துக்காக வாழ்க்கையையே அர்ப்பணித்த இவர் 1977ல் பத்து நாட்கள் நாடகப் பயிற்சி முகாம் நடத்தினார். பி. வி. காரந்த் இதற்கு வந்திருந்தார். 1978ல் தேசிய நாடகப் பள்ளியினர் தென்மாநிலங்களுக்கான நாடகப் பயிற்சி முகாமைக் காந்தி கிராமத்தில் இரண்டரை மாதம் நடத்தினார்கள். இதன் முடிவில் பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்', ஜி. சங்கரப் பிள்ளையின் 'கிராதம்' (மலையாள நாடகம்) இரண்டையும் தயாரித்தார்கள். பாரதியாரின் நாடகத்தை இயக்கிய 28 வயது இளைஞர், முழுநேர நாடகக்காரர் பன்சி கௌல், நாடு முழுவதும் பல கிராமங்களில் நாடக முகாம் நடத்தியவர். இந்த நாடகங்கள் டெல்லி தேசிய நாடக விழா வரை சென்றன. இங்கே கவனிப்பாரில்லை, நமக்குத்தான் மௌளி, விசு இத்யாதிகளே போதுமே.

சென்னையில் இந்த நாடகங்கள் நடத்தப்பட்டன. தமிழ்நாடு இயலிசை நாடக மன்ற ஆதரவில் மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் அரங்கில் நிகழ்ந்தன. ஆனால் டிம்பக்டூவிலிருந்து கலைக் குழு வந்தால், மூவர்ணப் போஸ்டர்களை ஆயிரக் கணக்கில் அச்சடித்து ஒட்டும் இயலிசை நாடக மன்றம், இதற்கு ஒரு போஸ்டரும் அடிக்கவில்லை, ஏன்? நாடகப் பாரம்பரியம் மிகுந்த அண்ணன் டி. வி. நாராயண சாமிதான் பதில் சொல்ல வேண்டும்.

தமிழ்ப்பண்பாடு என்று வாய் கிழிய முழங்குகிற இந்த ஊரில் தெருக்கூத்தைப் புனருத்தாரணம் செய்ய கூத்துப்பட்டறை அமைப்பினரும் எழுத்தாளர் ந. முத்துசாமியும்தான் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். புரிசை தம்பிரான் சகோதரர்களுக்கு நர்த்தகி பத்மா சுப்ரமண்யத்தின் வாயிலாக உதவிகளைத் திரட்டுகிறார் முத்துசாமி.

இத்தனை உருப்படியான காரியங்கள் இங்கே நடந்தாலும் ஆதர வளிக்கவோ ஊக்குவிக்கவோ ஆளில்லாததற்குக் காரணம் பணம் பண்ணுகிற நோக்கம் மட்டுமே உள்ள சபாக்கள்,

நாடகக் குழுக்கள் மட்டுமல்ல, குமுதம் உட்பட வெகுஜனப் பத்திரிகைகளும் தான்.

பரிக்ஷா நாடகங்களுக்குச் சுமார் இருபத்தைந்து வார, மாத, தினசரி இதழ்களுக்கு அழைப்புப் போகிறது. விமர்சனமோ, பாராட்டோ எதிர்பார்த்து அல்ல. இதெல்லாம் நடக்கிறது என்ற கலைப்பிரக்ஞை வரட்டுமென்றுதான். ஆனால் 25ல் இரண்டு மூன்று பேர்தான் நிகழ்ச்சிக்கு வருகிறார்கள்.'ஹிந்து' விமரிசகர் தவறாமல் வந்து ஏதாவது எழுதுகிறார்.

மதுரையில் ராமானுஜம் நடத்திய பயிற்சி முகாம், தேசிய நாடகப்பள்ளி நடத்திய முகாம், வீதி நாடகங்கள், பன்சி கௌல் இயக்கிய பாஞ்சாலி சபதத்தில் தரப்பட்ட சமகால அரசியல் விளக்கம், இதில் எதைப் பற்றியும் வெகு ஜன இதழ்கள் எழுதியது கிடையாது. 'தமிழ் நாடகத்தை இயக்கிய பன்சி கௌலுக்குத் தமிழ் தெரியாது; அவர் ஒரு காஷ்மீரி' என்று துணுக்குப் போடத்தான் இங்கே பத்திரிக்கை உண்டு; நாடகத்தைப் பற்றி எழுதவில்லை.

மாறாக, மூன்றாந்தர, எட்டாந்தர நாடகங்களைப் புகைப்படங் களுடன், தொடராக வெளியிடுகிறார்கள். டெலிவிஷனால் சபாவின் வருமானம் கெட்டதைப் பற்றி ஆராய்ச்சி; இரண்டுமே தரங்கெட்டிருப்பதைப் பற்றிக் கவலையில்லை. இளையராஜா-பத்மா சுப்ரமண்யம் தகராறுதான் தொடர்ந்து வருமேயொழிய, புரிசை தம்பிரானுடன் பத்மா சுப்ரமண்யத்தின் பேட்டி வராது. ரஜனிகாந்துக்குப் பைத்தியமா இல்லையா என்கிற மோசமான ஆராய்ச்சி தான் நம் வெகுஜனப் பத்திரிகைகளின் அதிகப்பட்ச கலைப் பிரக்ஞை.

கர்நாடகாவில் பத்திரிகைகள் இப்படியில்லை. அவை காட்டிய சரியான கலைப் பிரக்ஞையால்தான், காரந்தும், கர்னாடும், பிரசன்னாவும் கொஞ்சம் சீக்கிரமாகப் பாதிப்பை ஏற்படுத்த முடிந்தது. சென்னையைப் போல வர்த்தக நோக்கம் மட்டும் உள்ள நூற்றுக் கணக்கான சபாக்களும் அங்கே இல்லை.

இத்தனையையும் மீறி இங்கே காரியங்கள் நடக்கத்தான் செய்கின்றன. ருத்ராட்சப் பூனைகள் கண் மூடிக் கொண்டதால் நாடக உலகம் அஸ்தமித்துவிடவில்லை.

குமுதம் — **16.08.1979**